

## ஓம்சக்தி
## ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
## பதினொன்றாம் வகுப்பு
## இரண்டு மதிப்பெண் வினா விடைகள்

1.பேச்சு மொழி எழுத்து மொழியைக் காட்லும் உணர்ச்சி வெளிபாட்டு சக்தி மிக்கது ஏன்?

- எழுத்து மொழியில் எழுதுவதை மட்டும் தான் கை செய்கிறது.
- ஆனால் பேச்சு மொழியில் முகத்திலிருக்கும் வாய், எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிபாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.அதனால் தான் பேச்சு மொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிபாட்டு சக்தி மிக்கது.

2.பாயிரம் பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

- நூலை உருவாக்கும் ஆசிரியிரின் சிறப்பையும், இந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறைப் பற்றி பேசுவது பாயிரம் எனப்படும்.

3.இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக:

- தன் இனத்தையும், மொழியையும் பாடாத கவிதை, வேரல்லாத மரம், கூடில்லாத பறவை

4.உயிரீறு, மெய்யீறு விளக்குக

- நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக நிற்பின் அதை உயிரீறு என்பர். எ.கா: மணி + மாலை= மணிமாலை
- நிலைமொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக நிற்பின் அதை மெய்யீறு என்பர்.பொன்+ வண்டு= பொன் வண்டு

5.உயிர் முதல், மெய் முதல் விளக்குக:

- வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக நிற்பின் அதை உயிர் முதல் என்பர்.எ.கா:வாழை + இலை= வாழை இலை



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

- வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக நிற்பின் அதை மெய் முதல் என்பர். எ.கா: தமிழ் + நிலம்= தமிழ் நிலம்

6.தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறு குறிப்பு வரைக.

- நம் தமிழ் நாட்டின் மாநில மரம் பனை
- இது ஏழைகளின் கற்பக விருட்சம் சிறந்த காற்றுத் தடுப்பான்
- ஆழத்தில் நீர்மட்டம் கறையாமல்நீரை சேமிக்கும் தன்மையுடையது.

7.ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின- தொடரின் பொருள் யாது?

- மரங்கள் வெட்டப்பட்டு வான்மழை பொய்த்ததால் மண் மாறுகிறது
- அதனால் குருவிகளின் வாழ்வாதாரம் பாதிப்புக்கு உள்ளாதால் குருவிகள் தங்களுடைய இருப்பிடத்தை விட்டு வாழ்வதற்குகாக ஏதிலியாக எங்கோ போயின.

8.வளருங் காவில் முகில்தொகை ஏறும் - தொடர் குறிப்பிடுவது யாது?

- தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும்.
- மரங்கள் நிறைந்த இடத்தில் மழை பொழியும் என்னும் குறிப்பை இதன் மூலம் அறியலாம்.

CBSEtips.in

9.சங்க இலக்கியத்தில் மலை பற்றி குறிப்பிடும் மேற்கோள்களை குறிப்பிடுக.

- சேயோன் மேய மைவரை உலகம் - தொல்காப்பியம்
- விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ - திருமுருகாற்றுப்படை

10.மலைக்குடியிருப்புகள் எதைத் தருகின்றன?

- திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர்தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக் கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.

11.பழங்குடியினர் எத்தகைய இயல்புடையவர்கள்?

- ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள்
- தங்கள் குடியிருப்பு பகுதியைவிட உயரமான இடத்திலோடும் சிற்றாறுகள், ஓடைகள் இவற்றிலிருந்து நீர் எடுத்து பருகுகிறார்கள்.



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

12.தோடர் பற்றிக் குறிப்பு வரைக.

- நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர்.
- அவர்களின் வீடுகளில் திண்டுகள்(மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.

13.மலை, குன்று விளக்கம் தருக.

- மலை என்பது உயரமானது. குன்று என்பது உயரம் குறைவானது.

14.மலைக்கு வழங்கும் வேறு சொற்களைக் குறிப் பிடுக.

- வரை, கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி

15.கோட்டை எனும் சொல் குறிக்கும் பிற மொழி சொற்களை பட்டியலிடுக.

- மலையாளம் - கோட், கோடு
- கன்னடம் - கோட்டே, கோண்டே
- தெலுங்கு - கோட்ட
- துளு - கோட்டே
- தோடா - க்வாட்

16.காவடிச் சிந்து எவ்வாறு தோன்றியது?

- முருகப் பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர்,
- ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.
- அவர்களின் வழிநடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச் சிந்து என்ற பா வடிவம் தோன்றியது.

17.சென்னிகுளம் அண்ணாமலையார் - குறிப்பு வரைக.

- தமிழில் முதல் முதலில் வண்ணச்சிந்து பாடியதால் 'காவடிச் சிந்தின் தந்தை" எனப்போற்றப்படுகிறார்.
- அருணகிரியின் திருப்புகழ்போல் , தன் காவடிச்சிந்தை படைத்தளித்தவர்.
- 18 வயதில் ஊற்றுமலை குறுநில தலைவர் மருதப்ப தேவரின் அரசவைப் புலவரானார்.



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

www.CBSEtips.in

- வீரைத் தல புராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன் திரிபந்தாதி, கருவை
- மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

18.சென்னிகுளம் அண்ணாமலையார் இயற்றிய நூல்கள் யாவை?

- வீரைத் தல புராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன் திரிபந்தாதி, கருவை,மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

19.தமிழ் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

- காவடி தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று
- உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில், காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.
- வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர் வழிநடைப் பாடலாகப்பாடும் பாடல்வகை காவடிச்சிந்து.

20.நல்ல குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

- அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது.
- ‘நல்ல குறுந்தொகை என்னும் அடைமொழிக்கொண்டது.
- உரையாசிரியர்களால் மேற்கோள்கள் எடுத்தாளப் பட்டுள்ளது.
- தொகை நூலில் இதுவே முதல் நூலாக தொகுக்கப்பட்டுள்ளது என கருதப்படுகிறது.
- இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ
- இந்நூலுக்கு கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

21.பொதுவியல் திணை என்றால் என்ன?

- வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளில், கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

22.பொருண்மொழிக் காஞ்சித் துறை விளக்குக.



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

- மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

23.சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

- செயலின் வலிமை, தன்வலிமை, பகைவனின் வலிமை, துணையாளரின் வலிமை

24.மருந்து மரமாக இருப்பவர் யார்? மருந்து எது?

- மருந்து மரமாக இருப்பவர் :பெருந்தகையாளன்
- மருந்து: பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம்

25.புகழுக்குரிய குணங்களாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழி நின்று கூறுக.

- புகழுக்குரிய குணங்கள் : அன்பு, ஈகை, ஒழுக்கம், பொறுமை, அடக்கம், இரக்கம், வாய்மை
- பொதுமறை வழி: இணையற்ற உயர்ந்த புகழைப் போல உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.
- ” ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
  பொன்றாது நிற்பதொன்று இல்”

26.மொழியின் ஆதிக்கம் குறித்து மா.இராசமாணிக்கனாரின் கருத்துயாது?

- தமிழகத்தின் அரசியல் சுதந்திரத்தால், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும், கல்வி மொழியாகவும், சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொது மொழியாக விளங்கியது.

27.கற்கும் இடத்தை குறிக்கும் இலக்கியங்கள் எவை? எவை?

- கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் ‘பள்ளி‘‘ என்று பெரிய திருமொழியும்
- ஓதும் பள்ளி என்று திவாகர நிகண்டும் கல்லூரி என்று சிந்தாமணியும் குறித்துள்ளது

28.உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப் பு வரைக.

- தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறையில், திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப் புலவராக விளங்கிய



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

- மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ்தாத்தா உ.வே.சா சாமிநாதர் பாடம் பயின்றார்.

29.உவமை எவற்றின் அடிப்படையில் தோன்றும் ?

- வினை - புலிப்போல் பாய்ந்தான்
- பயன் - மழை போலக் கொடுக்கும் கை
- வடிவம் - துடி போலும் இடை
- உரு(நிறம்) - தளிர் போலும் மேனி
- இவ்வாறு நான்கின் அடிப்படையில் தோன்றும்

30.உவமை, உருவகம் - வேறுபடுத் துக.

- ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமை தோன்றக் கூறுவது உவமையாகும்.
  (எ.கா) தாமரை முகம், பவளவாய்
- உவமையையும் உவமிக்கப் படும் பொருளையும் வேறுபடுத்தாமல் இரண்டும் ஒன்றே எனக் கூறுவது உருவகம் ஆகும்.(எ. கா)முகத்தாமரை, வாய்ப்பவளம்

31.ஆனந்தரங்கர் நாட் குறிப்பு குறிப்பு வரைக.

- தம்முடைய நாட்குறிப்பில் ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு,திங்கள், நாள், கிழமை, அந்த நாளின் நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே செய்திகளை எழுதியுள்ளார்.

32.மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

- மதினா நகரில் மேல்மாடங்கள் மேருமலைபோல் உயர்ந்திருந்தன.
- அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த பேரொலி, பெருங்கடல் ஒலி போல் இருந்தது.
- மதீனா நகரின் வீதிகள், பிரபஞ்சம் போல் பரந்து விரிந்திருந்தன.
- அத்துடன் பெரிய மாளிகைகள் சிறிதும் இடைவெளியின்றி நெருக்கமாக அமைந்திருந்தன.
- தோரணங்களும் கொடிகளும் கட்டப் பட்டுப் பொன்நகர்போல் பொலிந்தது.
- அதனால் மதீனாநகரம், ”ஒரு மாளிகை நகரம்” என்பது உறுதிப்பட்டது.



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

33. ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்எனுஞ் செல் வமே பழுத்த சேணகர்
இப்பாடலடிகளில் ஒளிரக் காய்ந்தது எது? பழுத்தது எது?

- மதீனா நகரில் திண்ணிய வலிமை நல்கும் வெற்றியும், அவ்வெற்றியைத் தரும் குறைவற்ற ஊக்கமும் காய்த்திருந்தன.
- தீன் என்னும் செல்வம் பழுத்திருந்தது.

34.கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது‖ ___ யாது?

- மதினா நகரில் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டோர் நிறைந்திருந்ததால் கலைஞர்களும், மறையவர்களும் தாம் எண்ணிய பொருள் வளத்தைக் கொண்டிருந்தனர் என்பதாம்.

35.மறுவிலாத அரசென இருந்த மாநகர்___ உவமையைப் பொருளுடன் விளக்குக.

- குற்றம் குறை இல்லாத அரசன் ஆட்சி நடத்துவது பொல என்பது உவமையின் பொருள்.
- மதீனா நகருக்கு இது உவமையாகக் கூறப்பட்டுள்ளது.
- மதீனா நகரில் பகை, வறுமை, நோய் முதலானவை இல்லை.
- அவை ஓடி மறைந்த நிலையில் குறைவில்லாத மானுட அறம், அந்நகரில் செங்கோலாட்சி புரிந்தது.
- அதனால் மதீனா நகரம், சிறந்த அரசைப்போல் பொலிவுடன் இருந்தது என உமறுப்புலவர் கூறுகிறார்.

36.மதினாவில் எது பூத்திருந்தது? எது காய்த்திருந்தது? எது கனிந்திருந்தது?

- தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் பூத்திருந்தது.
- வெற்றியைத் தருகின்ற ஊக்கம் காய்த்திருந்தது.
- தீன் எனும் செல்வம் பழுத்திருந்தது.

37.அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?

- களிற்றியானை நிரை ___ 120 பாடல்கள்
- மணிமிடைப்பவளம், - 180 பாடல்கள்
- நித்திலக்கோவை ___ 100 பாடல்கள்



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

38.மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

- மேகத்திடம் கூறுவதுபோல தலைவனுக்குத் தோழி குறிப்பினால் தலைவியை சந்திக்கும் இடம் கூறுகிறாள்.
- வேங்கை மலர் அணிந்து தலைவி, தோழியுடன் தினை புலம் காக்க செல்கிறாள்.
- கடலில் நீரை முகந்து, மரசம் போல் இடித்து, போர் வீரர் வாள் போல் மின்னிய மேகமே, நீ அங்கே சென்று பொழிவாயா? என மேகத்தை கேட்பதுப்போல் தலைவனுக்கு குறிப்பால் உணர்த்துகிறாள்.இவ்வாறு கூறும் குறிப்பு பொருளே இறைச்சி ஆகும்.

39.ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?

- 1.நேரிசை ஆசிரியப்பா, 2. இணைக்குறள் ஆசிரியப்பா,
- 3. நிலை மண்டில ஆசிரியப்பா, 4.அடிமறி மண்டில ஆசிரியப்பா

40.ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?

- மாச்சீர், விளச்சீர் ஆகிய ஈரசை சீர்கள் வரும்
- நேரொன்றா ஆசிரியத் தளையும், நிரையொன்றா ஆசிரியதளையும் வரும்

41.ஆசிரியப்பாவின் இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.

- அகவலோசை கொண்டது
- எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்றுவரும்
- இயற்சீர் மிகுந்தும், பிற சீர் கலந்தும் வரும்
- ஆசிரியத்தளை மிகுந்து வரும்

42.மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

- நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தாளுநர் என்னும் நான்கு பிரிவுகளை உடையது மருத்துவம் எனக்குறள் கூறுகிறது.

43.படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

- வீரம், மானம், முன்னோர்வழி நடத்தல், நம்பிக்கைக்கு உரியவராதல் என்னும் நான்கும் படைக்குப் பாதுகாப்பு ஆகும்.



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

44.இந்தியக் கட்டக் கலையின் மூன்று வகைகள் யாவை?

- நாகரம், வேசரம், திராவிடம்

45.ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளிலிருந்து நீங்கள் அறிவது யாது?

- திருவையாறில் உள்ள, ஒலோகமாதேவீச்சுரம் கோயில் கல்வெட்டில், ”எருதந் குஞ்சரமல்லி” என்னும் பெண் அதிகாரி பற்றிய குறிப்பு உள்ளது .
- இதிலிருந்து இராசஇராசசோழன் பெண்களை ஆணுக்கு இணையாக பாவித்தான் என்றும், பெண்ணை பெரிதும் மதித்து வந்தான் என்றும் தெரிகிறது.
- பெண்களுக்கும் ஆளும் திறமை இருக்கிறது என்பதை உணர்ந்தவன் இராசராசன்.

46.பிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?

- செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதுபோல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர்
- சுண்ணாம்புக்காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழைமையான ஓவியக் கலை நுட்பத்திற்கு /ப்ரெஸ்கோ ஓவியம் என்று பெயர்.
- இத்தகைய ஓவியம் அஜந்தா, எல்லோரா, சித்தன்வாசல் போன்ற இடங்களில் இருப்பவையாகும்.
- கற்றறி கோயிலுக்கு உதாரணம் மகாமலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் போன்றவையாகும்.

47.சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

- சேலத்து நாட்டில் குறி சொன்னதற்காக கிடைத்த சிலம்பு,
- கோலத்து நாட்டார் வரிசையாகக் கொடுத்த தண்டை
- பாண்டியனார் மகளுக்கு குறி கூறியதால் கிடைத்த பாடகம்
- குற்றாலநாதர் சந்நிதிப் பெண் கொடுத்த அணிமணி



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

- கண்டிய தேசத்தில் பழக்கத்தால் கிடைத்த காலாழி போன்றவை சிங்கி பெற்ற பரிசுகள் ஆகும்.

48.கலைச்சொல்லாக்கம் - பொருள் தருக

- செல்போன் - என்னும் ஆங்கிலச் சொல்லிற்குக் கைபேசி, செல்லிடப்பேசி, அலைபேசி போன்ற சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. இவ்வாறான சொற்களை உருவாக்கிக் கொள்ளும் முறைமைக்குக் கலைச் சொல்லாக்கம் என்று பெயர்.

49.கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை?

- ஆக்கப் பெறும் சொல் தமிழ்ச்சொல்லாக இருத்தல் வேண்டும்
- பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பாக அமைதல் வேண்டும்.
- வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்.
- ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும்.
- தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக்கூடாது.

50.கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?

- கலைச் சொல்லாக்கம்:கலைச் சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்கு தாய்மொழியில் முன்பே உள்ளே சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துச் சொற்கைஉருவாக்கியும் தருவதாகும்.
- அகராதி : பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம்.

51.உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

- ஓடிவருகின்ற ஆற்றுநீரைத் தடுத்து குளம் குட்டை ஏரிகளை அமைத்ததும், அவற்றில் இருந்து நீர் கொண்டு செல்ல வாய்க்காலை வெட்டியதும் தரிசு நிலத்தை வரப்பெடுத்து உழுது அந்நீரைக் கொண்டு விளைவித்ததும் மக்கள் கூடி வாழச் சிற்றூர்களை உண்டாக்கியதும் உழைப்பாளிகளின் தோள் வலிமையால் விளைந்தனவாகும்.



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

52.நிறுத்தக்குறிகளின் பயன்களைக் கூறுக.

- நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்திப் படிக்க முயலும்போது தெளிவாகப் பொருள் உணர்ந்து,படிப்பவர்களும் கேட்பவர்களும் பயன்பெறுவர்.

53.முற்றுப்புள்ளி வரும் இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

- தலைப்பின் இறுதி, தொடரின் இறுதி, முகவரி இறுதி, சொற்குறுக்கம், நாள் முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி வருதல் வேண்டும்.

54. தாமஸிகம் என்றால் என்ன?

- பூஜைக்குத் தேவையான மலர்களைத் தவிர வேறு எந்தப் பூக்களுடனும் நமக்கு அவசியம் எதுவும் இல்லை நாகரிக வழக்கத்தில் காலத்துக்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு.
- தோட்டக்காரனுடைய கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும்.
- மலர்ச்செப்பினுள் வழக்கம் போல் போவதும் வருவதும் தான் அவற்றின் வேலை .
- இதைதான் தாமஸிகம் அதாவது"மெடீரியஸியம்" என்கிறோம்.

CBSEtips.in

55.திருத்தக்குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

- பொதுவானவை
- நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை
- இடைவெளி தரவேண்டியவை
- இணைக்க வேண்டியவை
- எழுத்து வடிவம்



Please Send Your Answer Keys to our Email Id: cbsetips.in@gmail.com

CBSETips

# www.CBSEtips.in

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **CBSE Class 12** | Revised New Syllabus 2020-21 with Deleted Portion | Books | Study Materials | Original Question Papers | Sample Question Papers | Online Tests |
| **CBSE Class 11** | Revised New Syllabus 2020-21 with Deleted Portion | Books | Study Materials | Original Question Papers | Sample Question Papers | Online Tests |
| **CBSE Class 10** | Revised New Syllabus 2020-21 with Deleted Portion | Books | Study Materials | Original Question Papers | Sample Question Papers | Online Tests |
| **CBSE Class 9** | Revised New Syllabus 2020-21 with Deleted Portion | Books | Study Materials | Original Question Papers | Sample Question Papers | Online Tests |
| **CBSE Class 6-8** | Syllabus 2020-21 | Books | Study Materials | Original Question Papers | Sample Question Papers | Online Tests |
| **CBSE Class 1-5** | Syllabus 2020-21 | Books | Study Materials | Original Question Papers | Sample Question Papers | Online Tests |

**Upload Your Study Materials Easily Via Here – Click Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID –** cbsetips.in@gmail.com